2012 *ஏப்ரல்* 16]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில், பழஞ்சநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட, தேவனபுத்தூர் கிராமத்திற்குச் சத்துணவுக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் இக்கட்டடம் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் அகரமாக, அறிவின் சிகரமாக, ஆற்றலின் இருப்பிடமாக, அஞ்சாமையின் உறைவிடமாக, வீரத்தின் விளைநிலமாக, தமிழகத்தின் கலங்கரை விளக்காக விளங்குகிற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேராணைக்கேற்ப, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சத்துணவுக் கட்டடம் கட்டி விரைவில் திறக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள்வாயிலாக நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எங்கே வெளியே போகிறீர்கள்? உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

97—

தரம் உயர்த்துதல்

***3179—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியிலுள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாங்குநேரி தொகுதியிலுள்ள கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தக் கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும்மேல் இருக்க வேண்டும். நாளொன்றுக்கு 60 கால்நடைகள் அந்த மருந்தகத்திற்கு வந்து செல்லவேண்டும் என்பதும், அங்கே மருத்துவமனைக்குத் தேவைப்படுகின்ற ஆய்வுக் கூடம் மற்றும் சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான இடம் இருக்க வேண்டும் என்பதும் அரசின் விதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், நாங்குநேரி கிராமத்தில் உள்ள அந்த மருந்தகம் அரசின் விதிகளுக்குட்பட்டு உள்ளதால், அங்கே மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, அரசின் செயற்குறிப்பில் இந்தத் திட்டம் இடம்பெறும்போது, அதன் அடிப்படையில் பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஏழை மக்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தினை நமது மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும், அம்மாவின் அரசு 2012–2013 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 2010–2011 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் காட்டிலும் இருமடங்காக உயர்த்தி, 2012–2013 ஆம் ஆண்டில் 814.03 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதால், என்னுடைய தொகுதியிலுள்ள*

நாங்குநேரி கால்நடை மருந்தகத்தை—அதாவது நாங்குநேரி தாலுகா 53 கிராமங்களை உள்ளடக்கியது; பசு இனங்கள் 13,574; செம்மறி ஆடுகள் 15,247; வெள்ளாடுகள், 8,514; இதர இனங்கள் 847; முயல் பண்ணைகள் 2; கறிக்கோழி வளர்ப்புப் பண்ணைகள் 28; இந்த அளவிற்கு கால்நடைகளுக்கு நாம் வைத்தியம் செய்ய வேண்டுமென்றால், நாங்குநேரியிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வள்ளியூருக்குப் போக வேண்டியிருக்கிறது; இல்லையென்றால், பாளையங்கோட்டைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; இப்பொழுது இருக்கின்ற கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தமாக ஒரு ஏக்கர் இடம் இருக்கிறது; அதனால், அதைக் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று எங்களுடைய இயக்கத்தின் தலைவர் திரு. சரத்குமார் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன என்றுதான் நானும் சொல்லியிருக்கிறேன். எனவே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்தத் திட்டம் அரசினுடைய செயற்குறிப்பில் இடம் பெறும்போது, அதற்கு முன்னுரிமை அளித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத்தான் முதலிலே சொல்லிவிட்டேன். எனவே, நிச்சயமாக அந்த மருத்துவமனைக்குத் தேவையான அத்தனை சாத்தியக்கூறுகளும் உள்ளதால், உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், தேவனூர் ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அனைத்து வசதிகளும் கொண்டு அமைந்துள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கால்நடைகளுக்கு இரவு நேரங்களில் உடல் நலம் சரியில்லாத காலத்தில், அங்கேயே தங்க வைத்து சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் இருக்கின்றன. ஆனால், அங்கே உள்ள மருத்துவர்கள், பகுதிநேர மருத்துவர்களாக மட்டுமே செயல்பட்டுக் கொண்டுவருகிறார்கள். எனவே, அவர்கள் முழுநேர மருத்துவர்களாகச் செயல்படும் அளவிற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 843 மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுக்குப் பணி நியமனம் வழங்கும் வேலை நடைபெற்று வருகிறது. எனவே, நிச்சயமாக, அந்த மருத்துவமனையில் நிரந்தரமாக மருத்துவர் அடுத்த மாதத்தில் இருந்து செயல்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியத்தைச் சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன. கால்நடைகள் வைத்திருக்கும் அப்பகுதி மக்களுக்கு, இந்த நிதி ஆண்டிலேயே கால்நடை துணை மருத்துவமனை ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்ஜெட் உரையில், இந்த வருடம் 50 புதிய கால்நடை துணை மையங்கள் அமைக்கப்படும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கிராமத்திலே, அரசின் விதிப்படி 3,000 கால்நடைகளும், 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேறு எந்தக் கிளை மருத்துவமனையும் இல்லையென்று சொன்னால், உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் கிராமப் பகுதிகளைக் கொண்டது. அங்கே இருக்கக்கூடிய கால்நடை மருந்தகத்தை, மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குச் சொன்ன அதே பதிலைத்தான் உறுப்பினருக்கும் சொல்கிறேன். நீங்கள் சொல்கின்ற அந்தப் பகுதியிலே, 10,000 கால்நடைகள் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு அந்த மருந்தகத்திற்கு 60 கால்நடைகள் மருத்துவம் பெற வர வேண்டும். அந்த மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரமுயர்த்த, ஆய்வுக் கூடங்கள் கட்ட இட வசதிகள் இருக்க வேண்டும். இந்த விதிகளுக்கு உட்பட்டிருந்தால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதற்கு முன்னுரிமை அளித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

[2012 ஏப்ரல் 16

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளின் அடிப்படையிலே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குமரலிங்கம் பேரூராட்சியிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய சங்கர நல்லூர் பேரூராட்சியிலுள்ள எம்.ஜி. பகுதியிலே துணைக் கால்நடை நிலையம் அமைக்க வேண்டி பலமுறை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளேன். அந்த இடத்திலே துணைக் கால்நடை நிலையம் அமைத்துத் தர, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல, மலையாண்டிகூவனூரிலே உள்ள கிளை நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்றும் பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறேன். அதையும் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா?*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்கிற இடத்தில் 3,000 கால்நடைகள் இருக்கின்றனவா?*

திரு. சி. சண்முகவேலு: *கிராமப்புறப் பகுதி என்பதால், அங்கே தேவையான அளவிற்குக் கால்நடைகள் இருக்கின்றன; கேரளாவைப் போல அங்கேயும் இருக்கின்றன. அதனால் சட்ட திட்டங்களுக்குட்பட்டு அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் 50 கால்நடை துணை மையங்கள் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாக இந்த வருடம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

2012 ஏப்ரல் 16]

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கம்மாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள கால்நடை மருந்தகக் கட்டடம் முழுவதும் இடிந்துவிட்டது. அதற்குப் புதிய கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டித் தருவதற்கும், கம்மாபுரம் ஒன்றியம், சி.கீரனூர், சாத்தப்பாடி, கோட்டேரி போன்ற இடங்களில் அமைந்துள்ள கால்நடைக் கிளை நிலையங்களை, கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்தித் தருவதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் கால்நடை மருந்தகங்களை நவீனப்படுத்துவதற்கு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் 122 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, நீங்கள் சொல்கின்ற மருந்தகம் நிச்சயமாக நவீனப்படுத்தப்படும். மேலும், நீங்கள் சொல்கின்ற இடங்களிலுள்ள கால்நடை கிளை நிலையங்கள் தரமுயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், அரசினுடைய விதிகளுக்குட்பட்டிருந்தால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அவற்றைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியம், செஞ்சேரி மலையில் பகுதிநேரக் கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. அங்கே மருத்துவர் கிடையாது; ஒரே மருத்துவர்தான் இருக்கிறார். அந்தப் பகுதியில் விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே முழுநேரக் கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைத்துக் கொடுத்தால், அங்கிருக்கின்ற மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, அங்கு கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கடந்த முறை மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கால்நடை உதவி மருத்துவர்கள் பணியிடத்திற்கு மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொன்னேன். இப்போது 843 கால்நடை உதவி மருத்துவர்கள் அந்தப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எனவே, அனைத்து இடங்களிலும், நிச்சயமாக அடுத்த மாதம் முதல், முழு நேரக் கால்நடை மருத்துவர்கள் இருப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட வாவிடமருதூர் ஊராட்சியில் உள்ள கால்நடை கிளை நிலையத்தைத் தரமுயர்த்துவதாக அதிகாரிகள் கூறிச் சென்றனர். ஆனால், இதுவரையில் அதற்கான பணிகள் எதுவும் நடைபெறவில்லை. அந்தப் பணிகள் விரைவில் நடைபெறுமா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இப்போதுதான் எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நிச்சயமாக அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.*

டாக்டர் த. ஹரிதாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திண்டிவனம் தொகுதியில், திண்டிவனம்*

2012 ஏப்ரல் 16]

நகரத்தில் பல வருடங்களாகக் கால்நடை மருந்தகம் மட்டுமே இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் உள்ளது. திண்டிவனத்தைச் சுற்றியுள்ள 40 கிராமங்களிலிருந்து கால்நடைகளை அழைத்துவந்து, வைத்தியம் செய்துகொள்கிறார்கள். எனவே, அதைக் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார். அரசினுடைய விதிப்படி, அங்கே 10 ஆயிரம் கால்நடைகள் இருக்க வேண்டும். அங்கே ஆய்வுக் கூடங்கள் மற்றும் மருத்துவமனை கட்டுவதற்கு இடம் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு 60 கால்நடைகள் அந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்து செல்ல வேண்டும். இப்படி அரசு விதிகளுக்குட்பட்டு அந்த மருந்தகம் இயங்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. ஜானகிராமன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

பயணியர் விடுதி

***4571—திரு. ஐ. ஜானகிராமன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, ஆரோவில் பகுதியில் சுற்றுலாத் துறைமூலமாக, பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?